CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

**உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் - ஆரம்ப கருத்துக்கள்**

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA)**

**செப்டம்பர் 2023**

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் (ATA) திருத்தப்பட்ட சட்டமூலம் 2023 செப்டம்பர் 15 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) கவனத்தில் கொண்டுள்ளது. இச்சட்டமூலத்தின் முந்தைய பதிப்பு 2023 மார்ச் 22 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அது தொடர்பான பல கரிசனைகளை உள்ளடக்கி CPA ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதனைத் தொடர்ந்து 2023 மே 2 ஆம் திகதி நீதி அமைச்சினால் முன்மொழிவுகளை சமர்பிக்குமாறு கோரப்பட்ட அறிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக CPA சில முக்கிய கரிசனைகளை சமர்ப்பித்தது.

முன்மொழியப்பட்ட ATA சட்டமூலத்தின் ஆரம்ப பதிப்பில் பல திருத்தங்கன் செய்யப்பட்டுள்ளதை CPA அவதானிக்கின்றது. குறிப்பாக மரண தண்டனையை தண்டனையின் ஒரு வடிவமாக நீக்குதல் மற்றும் தடுப்பு கட்டளைகள் (DO) தொடர்பான ஏற்பாடுகளில் மாற்றங்கள் கொண்டு வருதல். அதாவது, இத் திருத்தங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு ஆரம்பத்தில் இரண்டு மாத காலத்திற்கு DO வழங்குவதற்கான அதிகாரத்தை வழங்குதல் என்பனவாகும். எவ்வாறெனினும் திருத்தப்பட்ட சட்டமூலத்தில் பயங்கரவாதக் குற்றத்தை மிகைப்படுத்துதல், விளக்கமறியல் காவல் உட்பட குற்றச்சாட்டுகள் இன்றி நீண்ட காலம் தடுத்துவைத்தல், நீதித்துறை மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் நிறைவேற்று அதிகாரத்திற்கு வழங்கப்பட்ட அதிகப்படியான அதிகாரங்கள் மற்றும் இராணுவமயமாக்கலை நிலைநிறுத்துதல் போன்ற சிக்கலான ஏற்பாடுகள் தொடர்ந்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, ஊரடங்கு உத்தரவுகள் தொடர்பான ஏற்பாடுகள் குறித்து CPA அக்கறை கொண்டுள்ளது. அவை அரசியலமைப்பிற்கு வெளிப்படையாகவே முரணாக உள்ளதுடன் அது மேலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரத்தை மேலும் விரிவுபடுத்துவனவாக உள்ளது. அத்துடன் முன்மொழியப்பட்ட இவ் ATA சட்டமூலமானது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கான சமீபத்திய முயற்சியாகும் என்று CPA குறிப்பிடுகின்றது. இது மிக சமீபத்தில், 2022 ஆம் ஆண்டு இடம் பெற்ற *அரகலய* மூலம் நிரூபிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரத்தை அகற்றுவதற்கான மக்களின் கோரிக்கைகளுக்கு மாறாக உள்ளது. அதிக அரசியல் பொறுப்புக்கூறல் மற்றும் ஆட்சி மாற்றத்திற்கான கோரிக்கைகள் இருந்தபோதிலும், முன்மொழியப்பட்ட ATA சட்டமூலத்தில் அமைப்புகளுக்கு தடை விதிப்பது, கட்டுப்பாடு உத்தரவுகள்

மற்றும் ஒழுங்குமுறைகளை வழங்குவது மற்றும் தடைசெய்யப்பட்ட இடங்களை வரையறுப்பது உள்ளிட்ட பரந்த அதிகாரங்கள் நிறைவேற்று அதிகாரத்துடன் ஆழமாக இணைக்கப்பட்டுள்ளன.

ATA சட்டமூலத்தை விரிவாக திருத்து தொடர்பாக அரசாங்கத்தின் தாமதமான மற்றும் அவசரத்துடன் கூடிய சிக்கலான செயல்முறை, குறிப்பாக ATA சட்டமூலத்தை உருவாக்குவதில் உள்வாங்கல் ஆலோசனை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவனவற்றில் காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட வாய்ப்பு குறித்து CPA தனது கரிசனைகளை மீண்டும் வலியுறுத்துகிறது. இந்நிலையில், அவ்வாறான செயல்முறையில் சட்டரீதியான பொறுப்பைக் கொண்டுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டமூலத்தின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்திற்கு கடிதம் எழுத வேண்டியிருந்தது.இதனை CPA கரிசனையுடன் குறிப்பிடுகின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் தாக்கம், சித்திரவதை மற்றும் அதன் எளிதாக்கிய துஷ்பிரயோகம் ஆகியவற்றைப் புரிந்துகொள்வதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தினால் நேரடியாக பாதிக்கப்பட்ட நீண்டகால கைதிகள் மற்றும் அவர்களின் நெருங்கிய உறவினர்கள் உட்பட சமூகங்கள் / தனிநபர்களுடன் கலந்துரையாடுவதில் உள்வாங்கல் மற்றும் வெளிப்படைத்தன்மை கொண்ட உண்மையான ஆலோசனை தேவைப்படுகின்றது. எனினும் பொது சமர்ப்பிப்புகளுக்கான கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதிலும், ATA சட்டமூலத்தில் உள்ள மிகவும் சிக்கலான சில ஏற்பாடுகளை சரிசெய்யத் தவறியுள்ளமை, இச்சட்டமூல உருவாக்க செயல்முறையானது ஒரு அடையாள முயற்சியே தவிர உண்மையிலேயே உள்வாங்கலை செயல்படுத்துவதற்கான செயல்முறை அல்ல என்பதைக் குறிக்கின்றது.

மேலும் இலங்கையில் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டங்கள் பயன்படுத்தப்பட்டு துஷ்பிரயோகம் செய்யப்பட்ட ஒரு சூழலில் ATA சட்டமூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. துஷ்பிரயோகம் மற்றும் தண்டனையில் இருந்து விலக்களிக்கும் கலாச்சாரத்தில் முன்மொழியப்பட்ட ATA சட்டமூலம் எவ்வாறு இதுபோன்ற நடைமுறைகளுக்கு ஆளாகக்கூடும் என்பது முக்கியமான கரிசனையாகும். எனினும் இத்தகைய கலாசாரப் பின்னணியில் மட்டுப்படுத்தப்பட்ட வெளிப்படைத்தன்மையுடன் சேர்ந்து முன்மொழியப்பட்ட இச்சட்டங்கள் மக்களுக்கு சிறியளவு நம்பிக்கையை அளிக்கின்றது.

மேற்குறிப்பிட்ட கரிசனைகளைக் கருத்தில் கொண்டு, முன்மொழியப்பட்ட ATA சட்டமூலத்தை திரும்பப் பெறுமாறு CPA அரசாங்கத்தை கோருகிறது. மேலும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை உருவாக்குவதற்கான எந்தவொரு செயல்முறையிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் இருக்க வேண்டும் என்றும், மற்றும் இது தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களுக்கும் இடையிலான ஒரு வலுவான ஆலோசனை செயல்முறையின் விளைவாக ஏற்படவேண்டும் என்றும், சர்வதேச தரங்களுக்கு இணங்க அவை இருக்க வேண்டும் என்றும் CPA மீண்டும் வலியுறுத்துகிறது. இது தொடர்பாக உண்மையான மற்றும் வெளிப்படையான ஆலோசனை செயல்முறையில் ஈடுபடுவதற்கான தனது தொடர்ச்சியான விருப்பத்தை CPA வெளிப்டுத்துகிறது.

முன்மொழியப்பட்ட ATA சடடமூலம் குறித்த CPA வின் விரிவான அறிக்கை விரைவில் வெளியிடப்படும்.